# NEWSLETTER

**FEBRUARY 2024**



VIVEKANANDA
COMMUNITY FOUNDATION


**Contact Us !**

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569


## எமது திட்டத்தில் மேலும் 8 புதிய மாணவர்கள் !!



எமது புலம்பெயர் உறவுகளின் அனுசரணையுடன் எமது மாணவர்களைப் பொறுப்பெடுத்தல் எனும் திட்டத்தின் ஊடாக பின்தங்கிய கிராமப்பிரதேசங்களான வேப்பவெட்டுவான், இலுப்பட்டிச்சேனை, கரடியனாறு போன்ற பிரதேசங்களுக்கு களவிஜயம் 01.02.2024 அன்று மேற்கொள்ளப்பட்டு மேலும் எட்டு மாணவர்கள் பொறுப்பெடுக்கப்பட்டனர்.

எமது அறக்கட்டளை உறவுகளும் அவர்களால் பொறுப்பெடுக்கப்பட்ட மாணவர்களும் வருமாறு,

❖ **கனடாவில் வசிக்கும் திரு.இ.ஏகாம்பரம் ஊடாக**

- திரு.ஜனார்த்தன் செந்துாரன் = கா.பிருசன்
- திரு.ஜனார்த்தன் செந்துாரன் = தா.அபிசாமினி
- திரு.யோகநாதன் மனோரஞ்சிதம் = ச.தனுராஜ்
- திரு.லோகாநந்தன் சிவாம்பிகை = ச.விதுசா
- திரு.நிருஜன் சிவசுப்ரமணியம் = ம.தயாழினி

❖ **சின்னத்தம்பி செந்தில்செல்வன்** = ந.தரணிதரன்
ச.சரோன்
ரா.ரக்சிகா
தோ.ஜினித்தா

இம்மாணவர்களுக்கான மாதாந்த ஊக்குவிப்புத்தொகை வழங்கும் செயற்பாட்டின் முதற்கட்ட தொகையானது வழங்கி வைக்கப்பட்டதோடு விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் திட்டமுகாமையாளர் உள்ளிட்ட களப்பணியாளர்களும் சேவையாளர்களும் இதில் கலந்துகொண்டனர்.



## பின்தங்கிய கிராம மாணவர்களுக்கான கணினி செயலமர்வு

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பினூடாக மனிதநேய நம்பிக்கை நிதியத்தினரின் நிதி அனுசரணையுடன் பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று விவேகானந்த தொழில்நுட்பக் கல்லூரியினரால் அனைவருக்கும் கணினி அறிவு கிடைக்கவேண்டும் என்பதற்காக பயிற்சி செயலமர்வுகள் தொடர் கட்டங்களாக நடாத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் செங்கலடி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கித்துள் மற்றும் கரடியனாறு பிரதேசத்தில் வசிக்கும் மாணவர்களுக்கான அடிப்படை கணினிப் பயிற்சிக்கான இரண்டாவது செயலமர்வு கரடியனாறு பிரதேசத்தில் நடாத்தப்பட்டது.

# Top news

## நன்கொடையாளர்களின் விஜயம்

### இலண்டன் கனகதுர்க்கையம்மன் ஆலயத்தலைவரின் விஜயம்



இலண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத்தினர் அவர்களின் உதவியுடன் மட்டக்களப்பு பிரதேசத்தில் எம்மால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளைப் பார்வையிடும் வண்ணம் இலண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தலைவர் வைத்தியகலாநிதி.வே.பரமநாதன் அவர்கள், அறங்காவலர் சபை உறுப்பினர்களான பேராசிரியர்.ஸ்ரீரங்கன் அவர்கள், மற்றும் திரு.சிவலோகன் அவர்களுடன் எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் ஆகியோர் 10.02.2024 அன்று களவிஜயத்தினை மேற்கொண்டிருந்தனர். அதற்கிணங்க புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள சமூக நலன்புரி அமைப்பு மற்றும் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியைப் பார்வையிட்டதோடு கல்லூரி மாணவர்கள் மற்றும் சேவையாளர்களுடனான வலந்துரையாடலைத் தொடர்ந்து ஆலயத் தலைவர் வைத்தியகலாநிதி.வே.பரமநாதன் அவர்களது சேவை பாராட்டப்பட்டு பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே இலண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தினரால் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக செங்கலடி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கொம்மாதுறைப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலய சமுதாயக் கல்லூரி மற்றும் கொம்மாதுறை விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி போன்றவற்றையும் பார்வையிட்டனர்.

### அறக்கட்டளை உறவுகளின் விஜயம்

எமது அறக்கட்டளையுடன் ஐந்து வருடத்திற்கும் மேலாக இணைந்து பணியாற்றிக்கொண்டிருக்கும் எமது நன்கொடை உறவான கனடாவைச் சேர்ந்த திரு.இ.ஏகாம்பரம் அவர்களின் சகோதரரான திரு.சிவராஜ் அவர்களின் மகனான திரு.லவன் சிவராஜா மற்றும் அவரது துணைவி திருமதி.ஸ்ரீநிதி சுப்பிரமணியம், ஆகியோர் வருகை தந்ததோடு 12.02.2024 முதல் 17.02.2024 வரை சுமார் ஒரு வார காலம் எம்முடன் இணைந்து தொண்டராகப் பணியாற்றியதோடு எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி புதுக்குடியிருப்பு மற்றும் கொம்மாதுறை கிளைகளையும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளை, அமிர்தா நிறுவனம் ஆகியவற்றையும் பார்வையிட்டதோடு மட்டுமன்றி எமது திட்டப்பிரதேசங்களையும் பார்வையிட்டு அதற்கான அறிக்கைகளையும் சமர்ப்பித்தனர்.











## சாதனையாளர்களின் சங்கமம் !!

எம் உறவுகளால் பொறுப்பெடுக்கப்பட்டு மாதாந்தம் ஊக்குவிப்புத்தொகை பெறும் மாணவர்களில் சாதனையாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு 13.02.2024 அன்று இடம்பெற்றது. எமது அறக்கட்டளை உறவுகளான திரு.லவன் சிவராஜா மற்றும் அவரது துணைவி திருமதி.ஸ்ரீநிதி சுப்பிரமணியம், ஆரையம்பதி இராமகிருஸ்ண மிஷன் பாடசாலை அதிபர், பிரதேச செயலகத்தில் மாணவர்கள் மற்றும் சிறுவர்களுடன் பணிசெய்யும் உத்தியோகத்தர்கள் மற்றும் எமது அனைத்து அமைப்புகளின் பொறுப்பாளர்கள், கல்லூரி பயிலுனர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.





❖ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களும் அவர்களைப் பொறுப்பெடுத்தவர்களின் விபரங்களும் வருமாறு,

- கணபதிப்பிள்ளை சாலினி = திரு.ராஜேஷ் கணேசராசா, கனடா
- தேவகுமார் யோவிதா = திரு.வரா சிவராஜா, இலண்டன்
- விமலநாதன் டிலுக்ஜி = மனித நேய நம்பிக்கை நிதியம், இலண்டன்

❖ க.பொ.த.சாதாரண தரம் சித்தியடைந்த மாணவர்களும் அவர்களைப் பொறுப்பெடுத்தவர்களின் விபரங்களும் வருமாறு,

- மகேஸ்வரன் நீர்த்தனா = திரு.இ.குணரெட்ணம், கனடா
- சந்திரசேகரம் விஷ்வரூபினி = திரு.திருமதி. விஜி ஏகாம்பரம், கனடா

❖ சுற்றாடல் முன்னோடிப் படையணி ஊடாக ஜனாதிபதி விருதிற்குத் தெரிவாகிய மாணவர்களும் அவர்களைப் பொறுப்பெடுத்தவர்களின் விபரங்களும் வருமாறு,

- கணேசன் கஜேந்தினி = திரு.க.தவச்செல்வன், அமெரிக்கா
- யோகராசா பதுசனா = திரு.க.தவச்செல்வன், அமெரிக்கா
- ஹரிராஜ் கல்ப்பனா = திருமதி.கலா லோகநாயகம், பிரான்ஸ்

❖ நாட்டியநாடகப் போட்டியில் கலந்து கொண்டு தேசிய மட்டத்தில் 3 ஆம் இடம்பெற்ற மாணவர்களும் அவர்களைப் பொறுப்பெடுத்தவர்களின் விபரங்களும் வருமாறு,

- இராமபிரபா வதனரட்சா = திரு. க.தவச்செல்வன், அமெரிக்கா
- கணேசன் கஜேந்தினி = திரு. க. தவச்செல்வன், அமெரிக்கா
- மகாலிங்கம் சிவதுர்க்கா = திரு.திருமதி.சிவசேகரம் பிரேமளா, கனடா

❖ மாதாந்த உதவித்தொகை மூலம் மரநடுகை மேற்கொண்டு இன்று எமக்கும் பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட மாணவரும் அவரைப் பொறுப்பெடுத்தவர் பற்றிய விபரமும் வருமாறு,

- வேலுப்பிள்ளை ஜதுஷன் = திரு.தம்பியையா அவர்களின் பேரப்பிள்ளைகள்

இந்நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டதோடு அவர்களுக்கான பணப்பரிசில்களும் நினைவுச்சின்னங்களும் வழங்கிவைக்கப்பட்டது.

## இலண்டன் கனகதுர்க்கையம்மன் ஆலயத்தலைவரின் பிறந்தநாள் கொண்டாட்டம்



இலண்டன் கனகதுர்க்கையம்மன் ஆலயத்தலைவர் வைத்தியகலாநிதி.வே.பரமநாதன் அவர்களின் 80 வது பிறந்தநாள் கொண்டாட்டமானது 14.02.2024 அன்று வவுனியாவில் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் முல்லைத்தீவு அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தின் தலைவர் மற்றும் முகாமையாளரும் கலந்துகொண்டனர்.



எமது நன்கொடையாளர்களுடனான மாதாந்த திட்ட மீளாய்வுக் கலந்துரையாடல் 16.02.2024 அன்று கொம்மாதுறையில் இடம்பெற்றதோடு எமது சமுதாய அறக்கட்டளை பற்றிய தெளிவூட்டலும் வழங்கப்பட்டதோடு வெளிக்களப்பயணமும் மேற்கொள்ளப்பட்டது.

## நன்கொடையாளரின் பிறந்த தின கொண்டாட்டம்



சிறுவர் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் பாலர் பாடசாலைகளுக்கான போசாக்கு உணவு, ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு, விசேட தினங்களில் பரிசில்கள் மற்றும் மாணவர்களுக்கான சீருடை போன்றவற்றை எமது புலம்பெயர் உறவுகளின் அனுசரணையுடன் வழங்கிவருகின்றோம்.

அந்தவகையில் எமது திட்டத்தின் கீழ் இயங்கும் திருநீற்றுக்கேணி/நலன்புரி பாலர் பாடசாலையில் **திருமதி.தாரணி ராம்ராஜ்** அவர்களின் பிறந்த தினம் 08.02.2024 அன்று விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினரால் பாலர் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியருடன் இணைந்து சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டதோடு மாணவர்களின் கல்விக்கான உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

## சக்தி பாலர் பாடசாலையினரின் தைப்பொங்கல் விழா

எமது திட்டத்தின் கீழ் இயங்கும் வந்தாறுமூலை/சக்தி பாலர் பாடசாலையானது கனடாவில் வசிக்கும் **திரு.முருகேசு விசாகன்** அவர்களின் உதவியுடன் நடாத்தப்பட்டு வருகின்றது. இப்பாலர் பாடசாலையில் 05.02.2024 அன்று தைத்திருநாள் கொண்டாட்டமானது வெகு விமரிசையாக இடம்பெற்றது. பாலர் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பெற்றோர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.






## மாணவர்களின் கல்விக்கான உபகரணங்கள்

அறக்கட்டளையினூடாக அடையாளம் காணப்பட்ட 2 பாடசாலை மாணவர்களின் கல்விக்கான உபகரணங்கள் 22.02.2024 அன்ற எமது திட்ட முகாமையாளரின் தலைமையில் விவேகானந்த தொழிநுட்பக்கல்லூரியில் வழங்கிவைக்கப்பட்டது.

மட்/ திக்கோடை கணேச வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தரம் 1 தொடக்கம் 11 வரையான 61 மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் 29.02.2024 அன்று விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக வழங்கப்பட்டது.

இதற்கான நன்கொடை உதவி வழங்கியோர் விபரம் வருமாறு

- திரு.கோபால் பகீரதன், கனடா
- திரு.குணரட்ணம் , இலண்டன்
- திரு.சுபவண்ணன் ஜெயபாலச்சந்திரன் , அமெரிக்கா



திக்கோடை கணேச வித்தியாலயத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றதோடு அதிபர், ஆசிரியர்கள் மற்றும் எமது அறக்கட்டளையின் முகாமையாளர் உள்ளிட்ட அறக்கட்டளையின் சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அமாவாசை திதியை முன்னிட்டு 09.02.2024 அன்று கனடாவில் வசிக்கும் **திரு.கோபால் பகீரதன்** அவர்களின் நன்கொடை உதவியுடன் நந்தவனம் இல்லத்தில் வசிக்கும் முதியவர்களுக்கான மெத்தை மற்றும் விசேட உணவு வழங்கப்பட்டதோடு மரக்கன்றுகளும் நடப்பட்டது.





அமாவாசை திதியை முன்னிட்டு அடையாளம் காணப்பட்ட குடும்பம் ஒன்றுக்கான வாழ்வாதார ஊக்குவிப்புத்தொகையும் உணவுப்பொருட்களும் **திரு.ஏகாம்பரம் ஊடாக திரு.திருமதி.உதயகுமாரன் ரகுமாரி** அவர்களின் அனுசரணையுடன் 09.02.2024 அன்று வழங்கப்பட்டது.



## அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்







இலண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தலைவர் வைத்தியகலாநிதி.வே.பரமனாதன் அவர்கள் 24.02.2024 அன்று அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தைப் பார்வையிட்டதோடு சாரதா நிலைய மாணவர்களால் கலைநிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணவிகளுடனான கலந்துரையாடலும் இடம்பெற்று அவர்களது தேவைகள் மற்றும் அதற்கான தீர்வுகளும் ஆலொசிக்கப்பட்டது.

## சாரதா நிலைய மாணவிகளுக்கான விழிப்புணர்வு செயலமர்வுகள் !!



தற்போதைய எமது சமூக சூழ்நிலையில் பெண்களுக்கு தேவையான தற்காப்புக்கலை மற்றும் யோகா, கராத்தே போன்ற பயிற்சிகள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டுவரும் அதேவேளை அம்மாணவிகளுக்கான முதலுதவிச் செயலமர்வு 18.02.2024 அன்று மிகவும் சிறப்பான முறையில் அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தில் இடம்பெற்றதோடு அவசரநிலமைகளின் போதான முதலுதவியின் முக்கியத்துவம் பற்றிய தெளிவூட்டலும் வழங்கப்பட்டது.

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் மாசி மாதத்திற்கான விசேட உணவு வழங்கப்பட்டது.







- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவளி வாழும்கலை நம்பிக்கை கிராமம்
- நந்தவனம் முதியோர் இல்லம்
- ஜீவானந்தா ஆச்சிரமம்

மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569



